முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 826

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.01.2022, ஞாயிற்றுக்கிழமை

1. ஓம் என்ற சக்தியின் சூட்சும அவதாரமே
ஓங்காரன் என்னருளாக வந்த மாதவசியே
ஆம் என்று உலகோர் உன்வழிவர
அகிலமே பெருமாற்றம் காணும் எனக்கூறி
2. கூறியே சுப்ரமணியப்பெருமான் யானும்
குவலயத்தில் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
தெரிவிப்பேன் பிலவ சிலை திங்கள் தன்னில்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 18ம் நாள், 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை)
தேசிகனே எந்தன் மகா சூட்சுமம்
3. இந்த சூட்சுமத்தை அறிந்து வரும் மக்களுக்கு
சுத்த நெறிகண்டு தொடரும் மக்களுக்கு
மாட்சிமைபட மரணம் என்கின்ற இடர் விலகி ஓடும்
மறுமை என்கின்ற அல்லலும் அகன்றுமேவும்
4. மேவியே அரங்கன் கரம்படப்பெறும்
மக்களுக்கு உண்டான தீட்சை சக்தியானது
அவனியில் பெரும் பாதுகாப்பும்
அழியாமை என்கின்ற உன்னதத்தை தந்து
அகிலத்தார் இந்த கலியுகத்திலும் அரங்கன் வழி
5. வழிதனில் ஞானியாக பெறுகின்ற வாய்ப்பும்
வையகத்தை மாற்றுகின்ற மகா சக்தியும்
சக்தியும் அரங்கன் வழிவழி உலகோர்க்கு சரவணச்சுடரேற்றி ஆறுமுகன் யான்
பக்திபட உலகோர்க்கு நல்ல ஞான சித்தியை பகருவேன் அரங்கன் கரம்பட தீட்சைபலமாக
6. ஆகவே உலக மக்களே
அரங்கன் அளவில்லாத ஞானஆற்றலுக்குள்
களங்கமற வந்து கலந்து
கருணைபட ஞானம்பயின்றால் போதுமப்பா
7. அப்பனே உலகம் பாதுகாப்பு பெறும்
அரங்கன் மயமாக ஆற்றல் கூடிட
ஒப்புகொண்டு வானவர்களும் மகாசக்திகளும்
ஓங்கார உலகம் அமைக்க அருள்புரிந்து துணைவருவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–